சுருக்கம்

கேபிள் தொலைக்காட்சி - மாநகராட்சிகள் , நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளில் தரைக்குமேல் (Over Head) எடுத்துச் செல்லப்படும் கேபிள் வடங்களை முறைப்படுத்துதல் குறித்து - நெறிமுறைகள் வெளியிடப்படுகின்றன.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை**

அரசாணை (நிலை) எண் 51 நாள் 12.4.2000

அரசாணை (பத்தாண்டு) எண் 154 ந.நி.(ம) கு.வ.துறை நாள் 10.3.2000

**ஆணை:**

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளில் கேபிள் தொலைக்காட்சி அமைப்புகளால் தரைக்கு மேல் (Over Head) அமைக்கப்படும் கேபிள் வடங்களை முறைப்படுத்துவது அவசியம் எனக் கருதிய அரசு, அது குறித்து ஆய்வு செய்து, அதற்கான நெறிமுறைகளை அரசுக்கு பரிந்துரை செய்ய கீழ்கண்ட குழுவினை அமைத்து 10.3.2000-ம் நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை (பத்தாண்டு) எண்.154ல் ஆணையிட்டது.

| | | |
|---|---|---|
| 1. | முனைவர் எம். அனந்தகிருஷ்ணன்<br>துணைத் தலைவர், தமிழ்நாடு மாநில உயர்கல்விக்குழு | தலைவர் |
| 2. | செயலாளர், ந.நி.(ம) கு.வ.துறை | கூட்டுநர் |
| 3. | செயலாளர், உள்துறை | உறுப்பினர் |
| 4. | செயலாளர், தகவல் தொழில்நுட்பத்துறை | உறுப்பினர் |
| 5. | செயலாளர், வருவாய்த்துறை | உறுப்பினர் |
| 6. | செயலாளர், நெடுஞ்சாலைத்துறை | உறுப்பினர் |

2. மேலே குறிப்பிடப்பட்ட குழு 20.3.2000 அன்று கூடி, தரைக்குமேல் செல்லும் கேபிள் வடங்களை முறைப்படுத்துதல் தொடர்பான பல்வேறுபட்ட விசயங்களை பரிசீலித்தபின் அரசிற்கு தனது பரிந்துரைகளை அளித்தது. அப்பரிந்துரைகளின் அடிப்படையில், இப்பொருள் குறித்து கீழ்க்கண்ட நெறிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என அரசு ஆணையிடுகிறது.

(அ),கேபிள் தொலைக்காட்சி அமைப்பாளர்கள், முடிந்தவரை தெருவிளக்கு கம்பங்களை பயன்படுத்த வேண்டும். ஒரு வேலை கூடுதல் கம்பங்கள் அமைக்க வேண்டியிருப்பின் அப்படி கம்பங்களை பொருத்தப்படும் இடம், அவற்றின் உயரம், கம்பத்தின் உறுதித்தன்மை ஆகியவைகளை குறிப்பிட்டு அதன் அடிப்படையில் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களிடம் முன் அனுமதி பெறவேண்டும். ஒவ்வொரு மின்கம்பத்திலும் ஐந்து கேபிள் வடங்களுக்கு மிகாமல் இணைக்கலாம். அவ்வாறு இணைக்கும்போது அந்த மின்கம்பங்களின் உறுதித்தன்மை எந்தவிதத்திலும் பாதிக்கக்கூடாது.

(ii)கேபிள் தொலைக்காட்சி வடங்களை தெருவிளக்கு கம்பங்களில் பாதுகாப்பாகவும் முறையாகவும் பொருத்துவதற்கு வசதியாக தேவையான அளவில் கொக்கிகள் (Brackets) அனைத்து உள்ளாட்சி நிறுவனங்களும் பொருத்த வேண்டும். எனினும் தற்போது இருக்கும் மின்கம்பங்கள் அனைத்திலும் அவ்வாறு உடனடியாக கொக்கிகள் பொருத்த இயலாது என்பதால், உள்ளாட்சி நிறுவனங்கள்ள் கீழ்கண்ட முறைகளை பின்பற்ற வேண்டும்.

(அ) புதியதாக அமைக்கப்படும் மின்கம்பங்களைப் பொருத்த மட்டில் தேவையான கொக்கிகிள் (Brackets) பொருத்த வேண்டும்.

(ஆ) ஏற்கனவே இருக்கும் மின்கம்பங்களை பொருத்தமட்டில் அடுத்த ஓராண்டிற்குள் அனைத்து மின்கம்பங்களுக்கும் மேற்சொன்ன வசதி ஏற்படுத்தப்படவேண்டும். இவ்வாறு வசதிகள் ஏற்படுத்தும்போது தற்போது கேபிள் வடங்கள் செல்லும் தெருக்கள்/சாலைகளில் உள்ள மின்கம்பங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும்.

(iii)கேபிள் வடங்கள் சாலைகளின் குறுக்காக செல்லும்போது 8 மீட்டர்களுக்கு குறையாமலும், சாலைகள்/தெருக்களின் பக்கவாட்டில் செல்லும்போது 5.5 மீட்டர் உயரத்திற்கு குறையாமலும் இருக்க வேண்டும். எவ்வாராயினும் கம்பத்திலுள்ள விளக்கு மற்றும் அதை ஒட்டிய மின்பகுதிகளிலிருந்து குறைந்தபட்சம் ஒரு மீட்டருக்கு அப்பால் இந்த கேபிள் வடங்கள் இருக்க வேண்டும்.

(iV)மின் கம்பங்களில் கேபிள் வடங்களை இணைக்க சம்மந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் ஆணையர்களிடம் மனு செய்து முன் அனுமதி பெற்று கேபிள் வடங்களை மின்கம்பங்களில் இணைத்தபிறகு மீண்டும் ஆணையருககு மூனு செய்து மறுப்பின்மை சான்றிதழ் பெற வேண்டும். இந்த மறுப்பின்மை சான்றிதழின் அடிப்படையில் கேபிள் தொலைக்காட்சி நடத்த உரிமம் பெற வேண்டும். தற்போது கேபிள் தொலைக்காட்சி நடத்துபவர்களும் இவ்வாறு மறுப்பின்மை சான்றிதழ் பெற வேண்டும். இதற்கான விதிகள் தனியாக வெளியிடப்படும். அந்த விதிகளின் அடிப்படையில் தற்போதுள்ள கேபிள் தொலைக்காட்சி அமைப்பாளர் விதிகள் வெளியிட்ட ஆறுமாத காலத்திற்குள் மறுப்பின்மை சான்றிதழ் பெறவேண்டும்.

(V)மின் கம்பங்களை பயன்படுத்தவும் கூடுதல் கம்பங்கள் அமைக்கவும் ஆண்டு வாடகை உள்ளாட்சி அமைப்புகளுக்கு செலுத்த வேண்டும். இந்த ஆண்டு வாடகையை இதற்காக வெளியிடப்படும் விதிகளில் நிர்ணயிக்கும் விகிதத்தில் செலுத்த வேண்டும்.

3. இதற்கான விதிகளை அரசு வெளியிட்ட உடன் அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சி ஆணையர்களும் பேரூராட்சிகளின் செயல் அலுவலர்களும் உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் பேரூராட்சி இயக்குநர் இது குறித்து விரிவான அறிவுரைகள் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

/ஆளுநரின் ஆணைப்படி/

எஸ். மாலதி,
அரசு செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை 600 005
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை 108
முனைவர் திரு அனந்தகிருஷ்ணன், துணைத்தலைவர், தமிழ்நாடு உயர்கல்விக்குழு
சென்னை 600 005
முதலமைச்சரின் செயலாளர், முதலமைச்சர் அலுவலகம், சென்னை 600 009
சிறப்பு நேர்முக உதவியாளர், அமைச்சர் (ஊரக வளர்ச்சி(மற்றும்)உள்ளாட்சித்துறை)
சென்னை 600 009
செயலாளர் : உள்துறை/ வருவாய்த்துறை/ நெடுஞ்சாலைத்துறை/ தகவல் தொழில்
நுட்பத்துறை, சென்னை 600 009
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
ஆணையாளர்கள்/செயல் அலுவலர்கள்,
அனைத்து மாநகராட்சிகள்/நகராட்சிகள்/பேரூராட்சிகள்

நகல்: ந.நி.(ம) கு.வ.(நநி3)/வசெ/தேர்தல்) துறை சென்னை 600 009,

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

ஓம்/-
பிரிவு அலுவலர்.